# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 77/2019**

**Deposition of Witness for PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : அன்னக்கொடி | Caste | : |
| Father/Husband Name | : செல்லப்பா | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused absent petition filed and allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 18.04.2026**

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் பிறந்த ஊர் தேங்கல்பட்டி ஆகும். எனது கணவர் செல்லப்பா அய்யனார்குளம் ஆகும். எங்கள் ஊருக்கும் அய்யனார்குளத்திற்கும் சுமார் 15 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். நான் திருமணம் ஆன தேதியிலிருந்து செக்காணூரணியில் குடியிருந்து வருகிறேன். 1 வது எதிரி ரஞ்சித்குமார் 3வது எதிரி ஜெயக்குமார் ஆகியோர் எங்கள் பங்காளியான கருப்பன்கூட்டத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் எங்கள் ஊரில் மதுரை ரோட்டில் குடியிருந்து வருகிறேன். எதிரிகள் திருமங்கலம் ரோட்டில் குடியிருந்து வருகிறார்கள். எனது மகன் முதுநிலை பொறியாளர் படிப்பு படித்துள்ளார். என் மகனுக்கு வேலை வாங்கி தருவதாக 1வது எதிரி ரஞ்சித் என்னிடம் சொன்னார். நான் புகார் கொடுப்பதற்கு முன்பு

5,6 மாதங்களுக்கு முன்பு எதிரி என்னிடம் சொன்னார். 1வது ரஞ்சித் வேறு யாருக்காவது வேலை வாங்கி கொடுத்துள்ளாரா என்றால் அதுபற்றி தெரியாது. இதற்கு முன்பு இதுபோல் யாரையாவது 1வது எதிரி வேலை வாங்கி தருவதாக ஏமாற்றியதாக கேள்விப்பட்டேனா என்றால் இல்லை. 1வது எதிரிவேலை வாங்கி தருவதற்கு நான் நிலத்தை அடமானம் வைத்து பணம் கொடுத்ததாக எனது புகாரில் சொல்லியுள்ளதற்கு அதற்கான ஆவணங்கள் போலீசார் விசாரணையில் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மேற்படி எந்த ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் கொக்குளம் கிராமத்தில் எனக்கு சொந்தமாக இடம் இல்லை என்றால் சரிதான். நான் நிலத்தை அடமானம்வைத்து பணத்தை கொடுத்ததாக எனது புகாரில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.3 சுந்தரராஜ் எனது சமந்தக்காரர் எனது மகளை அவரது மகனுக்கு திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது மருமகன் சேதுராமன் என்பவர் அரசு போக்குவரத்து கழகத்தில் வேலை செய்கிறார் என்றால் சரிதான். ஏற்கனவே அ.சா.3 சுந்தரராஜுக்கும் 1வது எதிரி ரஞ்சித்குமாருக்கும் பட்டா மாறுதல் சம்பந்தமாக பிரச்சனை இருந்தது வருகிறது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் ரஞ்சித்குமார் அவரது தம்பி ஜெயக்குமார், எனது மகன் ஜெயக்குமார், எனது மருமகன் சேதுராமன், கட்டை மகன் முருகன், பொன்னி சிவன், தெய்வம் மனைவி சங்கீதா, நாகராஜ் ஆகியோர்கள் மதுரை சாலையில் செட்டியார் கடையில் பைனான்ஸ் நடத்தினார்கள் என்றால் சரியல்ல. அவர்களுக்குள் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. 3வது எதிரி ஜெயக்குமார் கடந்த 19.03.2018ம் தேதி என் மீதும் மற்றும் முருகன்,

பஞ்சவர்ணம், எனது மகன் ஜெயக்குமார், சேதுராமன், எனது அண்ணன் யோசனை மாயாண்டி, ஜெயசீலா ஆகியோர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நாங்கள்எதிரியிடம் நான்கு வருடம் கழித்து பணத்தை திரும்ப கேட்டோம். மேற்படி நான்கு வருட காலத்தில் சட்டப்படியாக நடவடிக்கை எடுக்க எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் எடுத்தோம். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். செக்காணூரணி காவல்நிலைய போலீசார் என்னையும், எதிரிகளையும் அழைத்து விசாரணை செய்தார்களா என்றால் விசாரித்தார்கள். 1வது எதிரி பத்திரிக்கை நிரூபர் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 3வது எதிரி எங்கள் மீதுபுகார் கொடுத்ததால் அதில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த போது சாட்சிகள் யாராவது இருந்தார்களா என்றால் நாங்கள் இருவர் மட்டும் தான் இருந்தோம். மூன்றாவது நபராக யாரையாவது பணம் கொடுக்கும்போது சாட்சிக்கு அழைத்து சென்றேனா என்றால் இல்லை. பணத்தை திரும்பி கேட்கும் போதும் நான் சுந்தரராஜ், பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் சென்றோம். பணத்தை கேட்டு எதிரி மறுத்த அடுத்த நாளில் நான் சொக்காணூரணி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். எதிரிகள் எங்களிடம் வேலை வாங்கி தருவதாக பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல.எனது மகன் எதிரிகள் மற்றும் சிலர் நடத்திய பைனான்ஸ் கம்பெனியில் நாங்கள் எதிரிகளுக்கு தரவேண்டிய பணத்தை எதிரிகள்

கேட்டதால்  எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து  பொய் சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN
Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.04.21 10:57:09 +0530

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 77/2019**

**Deposition of Witness for PW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலகிருஷ்ணன் | Caste | : | |
| Father/Husband Name | : | ராசுதேவர் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(Accused absent petition filed and allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 18.04.2026**

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :

அ.சா.1 எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். அ.சா.1 பணம் கொடுக்கும் போது நான் உடன் சென்றிருந்தேன். மேற்படி விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். புகார்கொடுப்பதற்கு 1 வருடத்திற்கு முன்பு கேட்டோம். நான் , சுந்தர்ராஜ், பரமன், ஜெயராமன் ஆகியோர்கள் உடன் சென்றிருந்தோம். சுந்தர்ராஜ் என்பவர் அ.சா.1னின் சம்பந்தகாரர் என்றால் சரிதான். எனக்கும் 1வது எதிரிக்கும் தகராறு உள்ளது என்றால் இல்லை. 1வது எதிரி இதற்கு முன்பு வேலை வாங்கி தருவதாக யாரிடமும் பிரச்சனை இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் ரஞ்சித்குமார் அவரது தம்பி ஜெயக்குமார், எனது

மகன் ஜெயக்குமார், எனது மருமகன் சேதுராமன், கட்டை மகன் முருகன், பொன்னி சிவன், தெய்வம் மனைவி சங்கீதா, நாகராஜ் ஆகியோர்கள் மதுரை சாலையில் செட்டியார் கடையில் பைனான்ஸ் நடத்தினார்கள் என்றால் சரிதான். அதன் வரவு செலவுகளை பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 எதிரிகள் மீது புகார் கொடுப்பதற்கு முன்பு 3வது எதிரி அ.சா.1ன் மீது புகார் கொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1வது எதிரி ஊரில் மதிப்புமிக்க நபர் என்றால் சரிதான். அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.3 சுந்தர்ராஜும் நானும் ஒரே பங்காளிகள் என்றால் சரிதான். அ.சா.3 தனது சம்பந்தி அ.சா.1ற்காக சாட்சி சொல்லும்படி என்னை கேட்டுகொண்டதால் அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் போலீஸ் விசாரணையில் கலந்துகொண்டேனா என்றால் இல்லை. போலீசார் என்னையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் உண்மையில் பணம் கொடுக்கும்போது இருந்திருந்தால் போலீசார் என்னை விசாரணை செய்திருப்பார்கள் என்றாலும் நான் பொய்யாக சம்பவ இடத்தில் இருந்ததாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியலல.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.04.21 10:57:16 +0530

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 77/2019**

**Deposition of Witness for PW3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுந்தரராஜன் | Caste | : | |
| Father/Husband Name | : | குமராண்டி தேவர் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(Accused absent petition filed and allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 18.04.2026**

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :

எனது மகன் பெயர் சேதுராமன். அ.சா.1ன் மகளின் பெயர் ஜெயசீலா. மேற்படி ஜெயசீலாவை எனது மகனுக்கு திருமணம் முடித்துள்ளோம் என்றால் சரிதான். எனது மகன் அரசு போக்குவரத்து துறையில் வேலை செய்து வருகிறேன். எனது மகன் 20 வருடங்களுக்கு முன்பே மேற்படி வேலையில் சேர்ந்துவிட்டார். எனது மகனுக்கு மேற்படி போக்குவரத்து துறையில் யாருக்கு எப்படி வேலை கொடுப்பார்கள் என்ற விபரம் தெரியும் என்றால் தெரியாது. போக்குவரத்து துறையில் முதுநிலை பொறியியல் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இருப்பதாக ஏதேனும் அறிவிப்பை அ.சா.1 ரோ, நானோ, எனது மருமகளோ பார்த்தோமா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் எங்களுக்கும் காந்தி மகன் ஜெகநாதன்

என்பவருக்கும் நிலம் சம்பந்தமான வழக்கு நடந்தது என்றால் சரிதான். 1வது எதிரி மற்றும் ஜெகநாதனும் சேர்ந்து தான் மேற்படி உரிமையியல் வழக்கை திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் போட்டார்கள் என்றால் சரிதான். அதனால் எங்களுக்கும் 1வது எதிரிக்கும் மன வருத்தம் இருந்தது என்றால் சரியல்ல வழக்கு தாக்கல் செய்ததில் இருந்து நான் அவர்களிடம் பேசுவதில்லை. மேற்படி சிவில் வழக்கு தாக்கல் செய்தபிறகு 1வது எதிரியிடம் நான் நேரடியாக பேசுவதில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பாகி 7, 8 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கலாம். வழக்கு தாக்கல் செய்து அதற்கு முன்பு மூன்று வருடங்கள் இருக்கலாம் என்றால் இருக்கலாம். அ.சா.1 கொடுத்த இந்த வழக்கு புகாரில் என்னை போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மேற்படி புகாருக்கு முன்பு 3வது எதிரி ஜெயக்குமார் அ.சா.1ன் மீது கடந்த 19.03.2018ம் தேதி புகார் கொடுத்தார் என்றால் தெரியாது. மேற்படி புகாரில் அனைவரையும் விசாரித்தார்களா என்றால் தெரியாது. ரஞ்சித்குமார் தான் அ.சா.1ன் மீது புகார் கொடுத்தார். அ.சா.1 எனது சம்பந்தகாரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் 1வது எதிரியும் கடந்த 15 வருடங்களாக பேச்சுவார்த்தை இல்லை என்றாலும் எனவே அ.சா.1ற்கு ஆதரவாக எதிரிக்கு எதிராக பொய் சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN
Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.04.21 10:57:22 +0530

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 77/2019**

**Deposition of Witness for PW4**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ஜெய்குமார் | | Caste | : |
| Father/Husband Name | : செல்லப்பா | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(Accused absent petition filed and allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 18.04.2026**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

கடந்த 2014ம் வருடம் நான் சென்னை ஆர்விஎஸ் பத்மாவதி கல்லூரியில் உதவி பேராசிரியராக பணியாற்றினேன். நான் ME முடித்து ஐந்து மாதங்களில் வேலைக்கு சேர்ந்துவிட்டேன். நான் பொதுவாக எனது முதுநிலை பட்டப்படிப்பு படித்து முடித்துவிட்டு அது சம்பந்தமான வேலை வாய்ப்புகளை பார்ப்பது வழக்கம் என்றால் சரிதான். நான் BE முடித்து இரண்டு வருடங்கள் கழித்து ME படித்தேன். மேற்படி இரண்டு வருட இடைவெளியில் வேலை வாய்ப்பு சம்பந்தமாக பத்திரிக்கைகளை பார்பேன் என்றால் சரிதான். மேற்படி சமயத்தில் போக்குவரத்து துறையில் உதவி பொறியாளர் வேலை காலியாக உள்ளது என்றும், அதனை நிரப்ப வேலை வாய்ப்பு அறிவிப்பு ஏதேனும் நாளிதழில் வந்ததை பார்த்தேனா என்றால் இல்லை. பொதுவாக

அரசு எந்த வேலைவாய்ப்பாக இருந்தாலும் அது ஒரு பதவிக்கான வேலைவாய்ப்பாக இருந்தாலும் கூட முறையாக எல்லோருக்கும் அறிவிக்கும் பொருட்டு அரசு நாளிதழில் மற்றும் பொது நாளிதழிலும் அரசு ஆணையாக வெளியீடுவார்கள் என்றால் சரியல்ல சில பதிவிகளுக்கு ரகசியமாக எந்தவித அறிவிப்புமின்றி ஆட்கள் தேர்ந்தெடுப்பார்கள். நான் சொல்வது போல் அடிப்படை ஏதாவது ஒரு நபரை அரசு போக்குவரத்து துறையில் வேலைக்கு எடுத்து நான் கேள்விப்பட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் BE 2009ம் ஆண்டு ME 2013ம் ஆண்டும் முடித்தேன். எனது தாயார் புகாரிலோ நான் போலீசார் விசாரணையிலோ எதிரிகள் எங்களிடம் போக்கு வரத்து துறையில் எந்தெந்த பணிமனையில் எந்தெந்த காலி இடங்கள் உள்ளது என்று எங்களிடம் சொன்னார்கள் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் அப்படி சொல்லவில்லை போக்குவரத்துதுறையில் எனக்கு வேலை வாங்கி தருவதாக சொன்னார்கள். லஞ்சம் கொடுத்து அரசு பணியில் சேருவது சட்டப்படி குற்றம் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் மற்றும் ரஞ்சித்குமார் அவரது தம்பி ஜெயக்குமார், சேதுராமன், கட்டை மகன் முருகன், பொன்னி சிவன், தெய்வம் மனைவி சங்கீதா, நாகராஜ் ஆகியோர்கள் சேர்ந்து தலா 2 லட்சம் முதலீடு செய்து மதுரை சாலையில் செட்டியார் கடையில் பைனான்ஸ் நடத்தினோம் என்றும், அதில் ஒவ்வொருவரும் தலா ரூபாய் 3,72,000/–லாப பங்கீடு பெற்றோம் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிகள் மீது புகார்கொடுப்பதற்கு முன்பு 3வது எதிரி ஜெயக்குமார் கடந்த 19.03.2018ம் தேதி என் மீதும் மற்றும் எனது அம்மா, முருகன், பஞ்சவர்ணம், சேதுராமன், யோசனை மாயாண்டி, ஜெயசீலா ஆகியோர்கள் மீது காவல் நிலையத்தில்

புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. பணம் ரூபாய் 3,75,000/— கொடுத்ததாக சொல்லும் நேரத்தில் நான் நேரடியாக செல்லவில்லை என்றால் சரிதான். பணத்தை எதன் அடிப்படையில் கொடுத்தேன் என்றால் 1வது எதிரி ரஞ்சித்தை எனக்கு 15 வருடங்களாக தெரியும் நல்ல பழக்கம் இருந்ததால் கொடுத்தேன். போலீசார்விசாரணையில் மூன்று மாதத்தில் எதிரி வேலை வாங்கி தருவதாக சொல்லியுள்ளேனா என்றால் போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை எனது அம்மாவை தான் விசாரணை செய்தார்கள். நான் கடந்த 2014ம் வருடத்தில் உதவி பேராசிரியராக மாதந்தோறும் ரூபாய் 25,000/— சம்பளம் வாங்கி கொண்டிருந்தேன். நான் நல்ல சம்பளத்தில் உதவி பேராசிரியராக பணியாற்றி கொண்டிருக்கும் போது நான் சொல்வது போல் லஞ்சம் கொடுத்து வேலைக்கு போக வேண்டிய அவசியமில்லை என்றாலும் நான் சொல்வது போல் எதிரிகளுக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நானும் எதிரிகளும் மற்ற நபர்களும் சேர்ந்து நடத்திய மேற்படி பைனான்ஸ் கடையில் ஏற்பட்ட பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு எனது தாயார் எதிரியின் மீது பொய் புகார் கொடுத்து அதற்கு அதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.04.21 10:57:33 +0530